1993 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) 1992-93-ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-93-ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamil Nadu hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make further grants to the Demands for the year 1992-93."

11. 1992-93-ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் 1992-93-ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,